சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் :
தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி]
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்]
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-4 Part -4

*Scanned by TapScanner*

மற்றொன்று:

**செம்மொழித் தமிழ்**

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

Scanned by TapScanner

# நாட்டுப்புறப் பண்பாடு தொடர்பான பழக்கவழக்கங்கள்

முனைவர் ஆ. இன்பவள்ளி
உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வுத் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

பண்பாடு என்பது மக்களால் பின்பற்றப்படும் சமுதாயக் கூறாகும். பண்படுதல் பண்பாடாகும். ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய ஒழுக்கத்திலும் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் அக்கறை கொள்ள வேண்டும். விலங்கினின்றும் மக்களைப் பிரித்துக் காட்டும் பண்பாடு காலத்திற்குக் காலம், நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபடும்.

## பண்பாடு

பண்பு என்ற சொல்லிலிருந்து பிறந்தவை பண்பாடு. பண்படுதல் பண்பாடாகும். மனிதன் பிற உயிர்களைக் காட்டிலும் ஆராய்ந்து அறியும் ஆற்றல் உடையவன். தனி மனித ஒழுக்கமே சமுதாய ஒழுக்கமாகக் கொள்ளப்படுகிறது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"
(நெய்தல் கலி-16-17)

"பயலும் பண்பு பாடறிந்து ஒழுகல்"
(நற்றிணை-160-2)

எனவரும் சங்க இலக்கியத் தொடர்களால் இதனை அறியலாம்.

நல்ல குணத்தையும் நாகரீக தன்மையும் உடைய மனிதர்களே சமுதாய முன்னேற்றத்திற்கு வித்திட்டவர்கள் ஆவர். சமுதாய சீர் அழிவுகளைத் தடுக்கவேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் பண்புடையவனாக இருக்க வேண்டும். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்க்கை அல்ல. தனக்கென வகுத்த கொள்கையோடு வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.

"ஒருவன் தன் குணநலன்களை நிரப்புதல் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதில் பேரார்வம் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்" - என்பார் அ. தட்சிணாமூர்த்தி.

மனித வாழ்வின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மதிப்பிடுவது பண்பாடாகும் என்றும் எண்ண இடமிருக்கிறது.

## மனித நேயம்

மனிதன் பேச ஆரம்பித்த காலத்திலிருந்து தன்னுடைய எண்ணங்களைச் சகமனிதனிடத்தில் பகிர்ந்துவந்தான். மனிதனோடு மனிதன் உறவாடும் பொழுது ஒருவர் மீது ஒருவருக்கு இரக்க மனமும் சமுதாய சிந்தனையும் தோன்றியிருக்க வேண்டும். மனிதனுடைய மன நியாயமே, மன நீதியே மனித நேயமாகும். அனைத்து மனிதர்களிடமும் இருக்க வேண்டிய அன்பு, ஒழுக்கம், நன்றி, தர்மம், சுயநலமின்மை ஆகியவற்றை மனிதநேயம் என்று கூறலாம்.

நாட்டுப்புறக் கதைகள், கற்றறிந்தப் புலவர்களால் பாடப்படுவது அன்று. நாட்டுப்புறத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களால் அவர்களின் உள்ளங்களில் என்ன கருத்துக்கள் தோன்றுகிறதோ அந்தக் கருத்தை அப்படியே கூறுவதாகும். அதனால் இக்கதைகளால் கோபம், தாபம், அன்பு, அருள், நீதி, நியாயம், ஒழுக்கம், ஏற்றத்தாழ்வு, உறவு நிலைகளில் நேர் நிலை, எதிர்நிலை என்ற அனைத்தும் மனித உணர்வுகளையும் வெட்ட வெளிச்சமாக நாட்டுப்புறக் கதைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சமுதாயம் மக்களால் உருவாக்கப்பட்டது. அச்சமுதாயத்தின் நோக்கங்களாக விளங்குபவர்கள் மனிதர்கள். அவர்களின் நெறிமுறைகளாகிய ஒழுக்கம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்றும்



Scanned by TapScanner

உயர்ந்த தன்மையுடையனவாக இருக்க வேண்டும். இல்லையெனில் சமுதாயப் பண்பாடு சீர்கெட்டுவிடும்.

மனித தேவைகளின் அடிப்படையில் அவர்களின் செயல்கள் நிகழ்கின்றன. இச்செயலில் பண்பாடுகள் மாறுவதில்லை.

## விருந்தோம்பல் பண்பு

வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துக் கொடுத்து உபசரிக்கும் பண்புடையோர்கள் நம் முன்னோர்கள்.

வீருந்து ஓம்புதல் என்ற இரண்டு சொற்களில் பிணைப்பாக அமையும் இத்தொடர் மிக அடர்த்தியான உட்பொருளைக் கொண்டுள்ளது. விருந்தினரைப் பேணுதல், விருந்தினரை உபசரித்தல் என்று இதற்கு விளக்கம் கூறப்படுகின்றது. விருந்து என்ற சொல் புதுமையைக் கூறி, பின்பு ஆகுபெயரால் விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று.

"விருந்தே தானும் புகுவது புனைந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் விருந்து என்பது புதுமை என அறியலாம்.

சமுதாயத்தில் விருந்திட்டவரை உயர்வாகக் கருதுகின்றனர். நம் நாட்டில் விருந்தினை ஒரு வேள்வியாகவே கருதும் வழக்கம் இருந்துவருகின்றது. வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை வரவேற்று விருந்துபடைத்து உபசரித்தல் தமிழர் பண்பாடாகும்.

"குன்றித் தின்றால் குன்றும் குறையும்" என்பது பழமொழி. அதுபோல ஒருவர் சேர்த்து வைத்த செல்வம் என்பது செலவழிக்க செலவழிக்க குறைந்துகொண்டே வரும் இது இயற்கை. ஆனால் விருந்தினரை வரவேற்று விருந்தோம்பி வாழ்கிறவன் வாழ்க்கையில் எந்தவகையான வரத்தமும் சிதைவும் நேர்ந்துவிடாது என்பதை,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பரவருந்து பாழ்படுதல் இன்று"(குறள் - 83)

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

வீருந்து என்பதற்குப் புதுமை என்பது பொருள். புதியவராகத் தம் வீடு தேடி வந்தவர்ருக்கு உணவு அளிப்பது விருந்து என்று பெயர்.

## விழாக்கள்

மக்கள் இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கையை உடையவர்கள். முதலில் இயற்கையைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். காலப்போக்கில் கற்களை நட்டு வைத்து வழிபடத் தொயங்கிய மனிதன் நாளடைவில் அத்தெய்வத்திற்குப் பூசைகளைச் செய்யத் தொடங்கினான். வாழ்வில் நிகழும் நல்லவை தீயவைகளுக்கு இறைவனே காரணம் ஆவான் என்று உணர்ந்து அத் தெய்வத்திற்கு விழா எடுக்கத் தொடங்கினான். அன்றிலிருந்து இன்றுவரை மக்களின் உணர்வோடு ஊறிப்போன பழக்கவழக்கங்களில் ஒன்றாக விழாக்கள் திகழ்கின்றன எனில் அது மிகையன்று.

மனிதச் சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும், அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். ஆண்டு முழுவதும் உழைத்த மனிதன் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்பு. திருவிழாக்களால் கலையும் கலையனுபவமும் மேலோங்கி வளர்கின்றன. திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் பின்னிப் பிணைந்துள்ளன. திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன.

விழாக்கள் நடத்தும் மக்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டும் விழாக்களை நடத்துவதில்லை. ஏதாவதொரு பயன் கருதி விழாக்களை நடத்துகின்றனர். இவ்விழாக்களில் நாட்டுப்புற மக்களின் நாகரிகமும் பார்போற்றும் பண்பாடும் வெளிப்படுகின்றன. தமிழர்களின் வாழ்வில் பிரிக்க முடியாதது திருவிழாக்களாகும். இத்திருவிழாக்கள் பெரும்பாலும் சமயத் தொடர்புடையனவாக விளங்கின. அம்மன் விழா, உழவு விழா, தேர்விழா போன்ற விழாக்கள்



Scanned by TapScanner

அனைத்தும் சமய விழாவாகவே கொண்டாடப்படுகின்றன என்பதில் ஐயம் இல்லை.

**பொங்கல் விழா**

தமிழ் மக்கள் அனைவராலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழா, உழவனுக்கு உதவிய மாடுகளுக்காக கொண்டாடப்படும் விழா பொங்கல் விழா ஆகும். உழைப்பின் உயர்வினை உலகுக்கு உணர்த்தும் உன்னதத் திருநாள். எனவே இந்நாள் தமிழர் திருநாள் என்றும் உழவர் திருநாள் என்றும் அழைக்கப்படுகின்றது.

**"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை" (குறள் - 1031)**

என்பது திருக்குறள். இதனினும் உழவுத் தொழிலே நாட்டிற்கு உயிர் நாடியாய் அமைவது என்பது புலனபகின்றது. தமிழகத்தின் அச்சாணியாக இன்றும் திகழ்வது உழவுத் தொழிலே ஆகும்.

புதுப்பானையில் பொங்கல் வைத்து மாடு ஆடுகளுக்குப் படையலிட்டு இறைவனை வழிபடும் விழா பொங்கல் விழா எனப்படும்.

"தை பிறந்தால் வழிப்பிறக்கும்" என்பது தமிழர் வாழ்வியல். தை மாதத்தில் பொங்கல் விழா கொண்டாடியதால் தைப்பொங்கல் என்றே அழைத்தனர். பயிரை அறுவடை செய்யும் விழாவாக இன்று அறுவடை கொண்டாடப்படுகின்றது. புதுப்பானையில் இஞ்சி, மஞ்சல்கட்டி, கரும்பு, உடன் வைத்து வீட்டின் முகப்பில் பூளைப் பூ சொருகி விளைந்த நெல்லைப் புதுப்பானையில் பொங்கி உண்ணும் விழாவாகப் பொங்கல் விழா இன்றும் இனங்காணப்படுகின்றது. இவ்வாறு நாட்டுப்புற இலக்கியங்கள் பண்பாடு தொடர்பான பழக்கவழக்கங்கள், மக்களின் விருந்தோம்பல் பண்பு, திருவிழாக்களின் சிறப்பு ஆகியவற்றை எடுத்து இயம்புகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. சுப. அண்ணாமலை (உ.ஆ) கலித்தொகை – ப-133
2. அ.நாராயணசாமி ஐயர் (உ.ஆ) – நற்றிணை நானூறு - ப -214
3. அ. தட்சிணாமூர்த்தி – தமிழர் நாகரீகமும் பண்பாடும் - ப - 06
4. இளம்பூரணர் (உ.ஆ) – தொல். பொருள். செய்யுளியல் - ப-512
5. பரிமேலழகர் - (உ.ஆ) – திரக்குறள் - ப - 461

ஃ